3. தகவல் கோரல்.

(அ) வினாக்களுக்கு விரைவில் விடைகளைப் பெற்றுத் தருதல்.

திரு. கோ. பூவராகன் : பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே கேள்வி நேரம் மிகவும் முக்கியமானது. அதற்குத்தான் முன்னுரிமை, முதன்மையாக வைத்திருக்கிறார்கள். இந்த மன்றம் தொடங்கி, தொடர்ந்து தினந்தோறும் நான்கு கேள்விகள்தான் அனுமதிக் கப்படுகின்றன. வினாக்கள் வராமல் இருக்கலாம். அதனாலே வாரம் முழுமைக்கும் இந்தக் கேள்வி நேரத்தை ஒதுக்காமல், சில தினங்கள் மட்டும் ஒதுக்கி, முழுமையான கவனம் செலுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன். அதோடு வெட்டுத் தீர் மானங்கள் அளிப்பதற்குக் கெடு முடிந்து விட்டது, 31 ஆம் தேதி யோடு. வழக்கமாக, அந்தந்த மானியக் கோரிக்கைகள்மீது அமைச்சர்கள் அவர்களுடைய சென்ற கால நடவடிக்கைகள், இனிமேல் செய்ய இருக்கின்ற நடவடிக்கைகள், கொள்கைகள் எல்லாம் வந்த பிறகுதான் வெட்டுத் தீர்மானங்கள் கொடுப் பதற்குச் சந்தர்ப்பம் இருக்கும். அப்படி ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுப்பதற்காக, காலத்தை நீட்டிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பது குறித்து, வரவு-செலவுத் திட்ட அறிக்கை படைக் கப்பட்ட பிறகு, சட்டப்பூர்வமாகத்தான் உங்களுக்கு அந்த அறி விப்புத் தரப்பட்டிருக்கிறது. அதில் விதிகளுக்குப் புறம்பானது எதுவும் இல்லை. தாங்கள் மூத்த உறுப்பினர் என்ற முறையில், தங்கள் கோரிக்கையைக் கவனித்து, அதுகுறித்து மாற்று ஏற்பாடு செய்ய முடியுமா என்பதைச் சிந்தித்து விடை சொல்வேன். (குறுக்கீடு) வினாக்களைப் பொறுத்தவரையில், இங்கே அமைச்சர் பெருமக்கள் எல்லாம் இருக்கிறார்கள். துறை களிலிருந்து வினாக்களுக்கான விடைகள் இன்னும் எங்களுடைய அலுவலகத்திற்கு முழுமையாக வந்து சேரவில்லை. அமைச்சர் கள் அனைவரும் தங்கள் செயலாளர்களிடம் சொல்லி, விரை வாக விடை தரவேண்டும் என்று வற்புறுத்த விரும்புகிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றக் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டு கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் ஆகின்றன. நாங்கள் எல்லாம் கேள்விகள் அப்போதே கொடுத்திருக்கிறோம். இதுவரை இங்கே அவையில் (குறுக்கீடு) நான்கு கேள்விகள் மட்டும் ஒவ்வொரு நாளும் போடுகிறீர்கள். இதற்கு முன்னால் சட்டமன்றத்தில் ஒரு நாளைக்கு இருபது கேள்விகள் போட்டு இருக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே விடைதான் அவருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கேயும் அமைச்சர்களுக்குச் சொல்லியிருக்கிறேன். செயலாளர்களுக்கும் சொல்லச் சொல்லியிருக்றேன். நிறைய வினாக்கள் வரும். ஒரு நாளைக்கு 15, 20 கூட வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, வினாக்களை நீங்கள் உங்களுடைய அலுவலகத்திலிருந்து எங்களுடைய துறைக்கு அனுப்புகின்றபோது, அமைச்சர்கள் மூலமாக அனுப்பினால் எவ்வளவு விரைவாக, பதில் அனுப்ப முடியுமோ, அதை நாங்கள் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்ய முடியும். ஆனால் எங்களுக்குத் தெரியாதபடியே துறைகளுக்கே வந்து சேர்ந்து விடுகிற காரணத்தால் எங்களால் அதைச் சரியாகக் கவனிக்க முடிவதில்லை. எனவே, அமைச்சர்கள் மூலம் இந்த வினாக்கள் துறைக்கு அனுப்பப்பட ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது குறித்து நேரடி கவனம் செலுத்தப்படும்.

(ஆ) கடலூர்ப் பொதுக்கூட்டத்திற்குச் சென்ற சிலர் தாக்கப்பட்டுள்ளது குறித்து.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நேற்று இரவு கடலூரிலிருந்து புறப்பட்டு அதிகாலை 4 மணிக்குத் தான் நான் வந்தேன். ஒரு பொதுக்கூட்டத்திலே பேசுவதற்காக, காங்கிரஸ் கட்சியினுடைய சார்பிலே நடந்த பொதுக் கூட்டத்திலே பேசுவதற்காக, நானும், புதுவை மாநில முதல்வர் திரு. பாரூக் அவர்களும் சென்று இருந்தோம். எங்களுக்குப் போதுமான பாதுகாப்பு அந்தக் கூட்டத்தில் கொடுக்கப்படாத காரணத்தினாலே, அங்கே பல துன்பங்கள் விளைந்தன என்பதை உங்களுக்கு நினைவுபடுத்தி, எங்கள் கூட்டத்திற்கு வந்து கொண்டிருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழர் ராமலிங்கத்தினுடைய மகன் கம்மான் என்பவரை, ஆளுகிற கட்சியைச் சார்ந்த சில தோழர்கள் வழிமறித்துத் தாக்கி அவருடைய தாடை எலும்ப ஒடிந்து இன்று மயக்க நிலையிலே ஆஸ்பத்திரியிலே போடப்பட்ட செய்தி கேள்விப்பட்டு ஓடோடிச் சென்று பார்த்தபோது—நானும் அங்கிருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்களும் சென்று பார்த்தோம். —நினைவிழந்த நிலையிலே அவர் அங்கு கிடந்து கொண்டிருந்ததையும், அந்தத் தாடை எலும்பு ஒடிந்ததோடு மட்டுமல்லாமல்,